MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# உதயசங்கர் சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திகள்



| ஆய்வாளர் | நெறியாளர் |
|---|---|
| கா.விஜயலட்சுமி, முனைவர்பட்ட ஆய்வாளர்(பகுதிநேரம்), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி. 9180219301 - kvanjac22121999@gmail.com | முனைவர் க.தனலட்சுமி உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,பொள்ளாச்சி. |



DOI 10.5281/zenodo.13097450.

**Abstract :**

Literary strategy is one of the factors that make literature look good. A short story should have a very good beginning and end. The beginning of the short story should be such as to stimulate the interest and thought of the reader. The ending of the short story should be crafted with deep care. As soon as the beginning is decided, the end must be decided. The author has used some new techniques in his short story, such as page heading method, footnotes, hindsight strategy, mythic strategy.

Key Words : Literary - Short Story - Myth

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் சிறப்பாகத் தோற்றம் பெறுவதற்குக் காரணமான கூறுகளில் இலக்கிய உத்தியும் ஒன்றாகும். சிறுகதையில் தொடக்கமும் முடிவும் மிகச் சிறப்பான முறையில் அமைதல் வேண்டும். சிறுகதையின் தொடக்கமானது படிப்பவரின் ஆர்வத்தையும் , சிந்தனையையும் தூண்டக்கூடிய வகையில் அமைய வேண்டும். சிறுகதையின் முடிவு ஆழ்ந்த கவனத்துடன் படைக்கப்பட வேண்டும். தொடக்கத்தை முடிவு செய்தவுடனேயே முடிவையும் முடிவு செய்துவிட வேண்டும். பக்கத்தலைப்பிடும் முறை, பின்குறிப்பு கூறுதல், பின்னோக்கு உத்தி, புராணஉத்தி எனும் சில புதிய உத்திமுறையினை ஆசிரியர் தனது சிறுகதைத் தொகுதியில் பயன்படுத்தியுள்ளார்.

**முன்னுரை:**

இலக்கியம் சிறப்பாகத் தோற்றம் பெறுவதற்குக் காரணமான கூறுகளில் இலக்கிய உத்தியும் ஒன்றாகும். படைப்பாளன் தான் கூற விரும்பும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குக் கையாளும் நெறிமுறையே உத்தி எனலாம். எழுத்தாளனின் திறனுக்கேற்ப உத்திகள் மாறுபடும் தன்மை கொண்டது.

உத்தி எனும் சொல்லிற்குத் தொல்காப்பியர்,

"ஒத்த காட்சி உத்தி வகை விரிப்பின்" 1 (தொல்.சொல்.1610) என்று விளக்கம் தந்துள்ளார். உத்தி எனும் சொல் தொல்காப்பியத்திலேயே இடம் பெற்றுள்ளது."உத்தி வகைகளைக் குறிப்பதில் தொல்காப்பியமும், நன்னூலும் வேறுபடினும் இரண்டும் முப்பத்திரண்டு வகை உத்திகளைக்



http://Creativecommons.org//license/by/4.0/.

குறிக்கின்றன” 2(வாழ்வியற்களஞ்சியம்.தொகுதி 4 ப. 862) என்று வாழ்வியற்களஞ்சியம் விளக்கம் தருகின்றது.

படைப்பாளன் தான் படைப்பில் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தும் போது கருத்துக்கள் செறிவுத்தன்மையோடு நிலை பெற்று இருப்பதை எல்லோராலும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**தொடக்க உத்தி** :

சிறுகதையில் தொடக்கமும் முடிவும் மிகச் சிறப்பான முறையில் அமைதல் வேண்டும். சிறுகதையின் தொடக்கமானது படிப்பவரின் ஆர்வத்தையும் , சிந்தனையையும் தூண்டக்கூடிய வகையில் அமைய வேண்டும். “ சிறுகதையில் தொடக்கமும் முடிவும் குதிரைப்பந்தயம் போல சுவை மிக்கதாக இருக்க வேண்டும் “ 2 (அரங்க.சுப்பையா, இலக்கியத்திறனாய்வு இசங்கள் கொள்கைகள். ப. 252)என்று அரங்க.சுப்பையா கூறுகின்றார்.

சிறுகதையின் தொடக்கம் நேரிடையாகக் கதைக் கருவைத் தொடுவதாக இருக்க வேண்டும். கதைக் கருத்தைத் தொடக்கத்திலேயே சொல்லி விட வேண்டும். இதன் தொடக்கம் வருகின்ற கருவைப் பொருத்து அமையும். நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட கதையில் தொடக்கமே ஆர்வத்தைத் தூண்டுபவனாகவும் , இயற்கையை மையமாகக் கொண்டும் இட வருணனையாகவும் அமைந்திருப்பதை அறிய முடிகின்றது.

புனைகதைத் தொடக்கம் என்பது,

- ஆர்வத்தைத் தூண்டும் தொடக்கம்
- வர்ணனையாக அமையும் தொடக்கம்
- விறுவிறுப்பான தொடக்கம்
- கதை மாந்தரை அறிமுகம் செய்யும் தொடக்கம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுகதை குதிரைப்பந்தயம் போல் தொடக்கமும் முடிவும் சுவை மிக்கதாக இருக்கவேண்டும் என்று எல்லரி செட்ஜ்விக் குறிப்பிடுகிறார். தொடக்கம் நன்றாக அமைந்தால்தான் வாசகன் முடிவு வரை சென்று கதையை வாசிப்பான்.

ஓரு நல்ல சிறுகதை என்பது சுவைமிக்க ஒருமாம்பழத்தை இறுதிவரை விரும்பிச்சுவைப்பது போன்றதாகும். அவ்வாறன்றி மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விடவேண்டும் என்ற எண்ணத்தை ஓர் சிறுகதை ஏற்படுத்துமாயின் அந்த சிறுகதையால் பயனில்லை. உதயசங்கர் அவர்களது சிறுகதைகள் இந்த நான்கு இயல்புகளையும் பெற்று அமைகின்றன எனலாம்.

**முடிவு உத்தி** :


http://Creativecommons.org//license/by/4.0/.

சிறுகதையின் முடிவு ஆழந்த கவனத்துடன் படைக்கப்பட வேண்டும். தொடக்கத்தை முடிவு செய்தவுடனேயே முடிவையும் முடிவு செய்துவிட வேண்டும். " முடிவை இறுதிப்படுத்தினால் தான் கதையின் ஒவ்வொரு பகுதியையும் முடிவை நோக்கி அமைக்க முடியும்" 3 ((மு.சுதந்திரமுத்து, படைப்புக்கலை ப. 112)என்று மு. சுதந்திரமுத்து விளக்கம் தருகின்றார். தொடக்கத்தைத் தீர்மானிக்கும் பொழுதே முடிவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்திட வேண்டும். முடிவைத் திட்டமிடவில்லை என்றால் கதை முடியாமல் எல்லையைத் தாண்டிச் செல்ல நேரிடும். ஆகவே முடிவை முடிவு செய்த பின்னரே கதை நிகழச்சிகளை நகர்த்திச் செல்ல வேண்டும்.

- கதைப் பொருளைக் கொண்டு முடிதல்
- கதாப் பாத்திரங்களைக் கொண்டு முடிதல்
- வாசகர்கள் கையில் முடிவை விடுதல்
- வினாவாக கதையை முடித்தல்

என்று கதை முடிவுகள் இயம்பப்பட்டுள்ளன.

சிறுகதையின் முடிவுகள் இன்பகரமாக இருக்க வேண்டும் எனச் சிறுகதை வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. பல ஆசிரியர்களுக்குக் கதை முடிவில் சுபம் என்று போட்டால் தான் திருப்தி. ஆனால் அது ஒரு பலவீனம் என்பது கி.ராவின் கருத்தாகும். வாழ்வு என்பது எப்போதும் மகிழ்ச்சியானது அல்ல: அழுகையும் உண்டு. ஆகவே துன்பியல் முடிவுகளையும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. உதயசங்கர் அவர்களது படைப்புகள் பெரும்பாலும் வாசகர் பக்கமிருந்து பேசுவதாக அமைகின்றது. எனினும் நான்கு வகை முடிவு இயல்புகளும் அவரது படைப்புகளில் காணலாகின்றது.

**பின்னோக்கு உத்தி:**

கதைப்பின்னலின் கால வரிசைப்படி நிகழ்ச்சிகளை அமைக்க இயலாத போதும், தொடர்புடைய சூழலில் அந்நிகழ்ச்சிகளை படைப்பில் அமைத்து வைக்கப் பின்னோக்கு உத்தி பயன்படுகின்றது.

நிகழ்ந்த கால வரிசைப்படி கதை சொல்வது மரபுவழிக் கதைப்பின்னலாகும். சு pக்கலின் நடுவிலே தொடங்கி முன் நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்ப்பதாக அமைப்பதும் உண்டு. இதுவே பின்னோக்கு உத்தி எனப்படும்.

1. நடப்புக்கதை நிகழ்ச்சியினூடே துண்டு துண்டாகவும் இடம்பெறலாம். கதாசிரியர் கூற்றாகவோ அல்லது கதைமாந்தர்களின் கூற்றாகவோ அமையலாம். மனசாட்சியின் கூற்றாகவும் அமைதல் உண்டு.

2. கதையின் முடிவை ஒட்டியும் இடம்பெறுதல் உண்டு.


http://Creativecommons.org//license/by/4.0/.

சொந்த ஊரான திருநெல்வேலியை விட்டு வந்து முப்பத்தஞ்சு வருஷங்களுக்கும் மேலாகி விட்டது. அவருக்கே அவருடைய பூர்வீகம் , பால்யகால வாழ்க்கை எல்லாம் அநேகமாக மறந்துவிட்டது. எப்பவாவது அவருடைய ஒரே ஆப்த நண்பான சுந்தரம்பிள்ளையிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, " வேய்… அந்த வாழ்க்கையே தனி சுகம்தான்… சிந்துபூந்துறை அழகும் , தாமிரபரணி ஆத்து தண்ணியும் ,ம்ஹ{ம்… இதென்ன ஊரா… சவத்துப்பய ஊரு… என்ன வேய்… தூங்கிட்டீரா…"( பி.ம.ப. 12) என்று தனது இளமைக்கால நிகழ்வுகளை எண்ணிப்பார்க்கும் நிகழ்வாக பிறிதொரு மரணம் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'டேனியல் பெரியநாயகத்தின் புல்லாங்குழல்' கதையில் பின்னோக்கு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

**புராண உத்தி**

புராண உத்தியை புதுக்கவிதையில் 'தொன்மம்' என்று அழைப்பர். தொன்மம் என்பது பழமையைக் குறிக்கும் புராண இதிகாச நிகழ்வுகளை ஏற்றும் ,மாற்றியும்,புதுக்கியும் கவிஞன் தன் கருத்தைப் புலப்படுத்தும் முறையாகும்.

'மீனாளின் நீலநிறப்பூ' என்ற சிறுகதைத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'இது ஒரு ரவிச்சந்திரனின் கதை' எனும் கதையில் ரவிச்சந்திரன் ரெவினியூ டிபார்ட்மெண்டில் குமாஸ்தா வேலை பார்த்தாலும் அவன் மனமகிழ்மன்றங்களிலும் சூதாட்டக்கூடங்களிலும் தான் இருந்தான். அதனால் சூதாட்டத்தில் கௌரவர்களுக்கு எதிராக ஆடும் போது தன் செல்வம் , நாடு, நகரம் என அனைத்தையும் இழந்த பிறகும் கூட சூதாட்டத்தைக் கைவிடாது , தனது உடன்பிறப்புகள் கட்டிய மனைவி என்று அனைவரையும் பணயமாக வைத்து ஆடித் தோற்ற தர்மனோடு ஒப்பிட்டு ரவிச்சந்திரன் சொல்லப்பட்டுள்ளான்.

**பின் குறிப்பு கூறுதல்** :

படைப்பில் சில இடங்களில் அதிகமான விளக்கம் வழங்க இயலாது. ஆகையால் சுருக்கமாக சொல்லிவிட்டு சென்ற நிகழ்வுகள் குறித்த விளக்கததை விரிவாகக் கூறும்பொருட்டு பின்குறிப்பு சேர்க்கப்படுவது உண்டு. அவ்வகையில் உதயசங்கர் தனது துண்டிக்கப்பட்ட தலையில் சூடிய ரோஜாமலர் எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'குரல்கள்' எனும் கதையில் பின்குறிப்பு வழங்கியுள்ளார்.

இச்சிறுகதையில் இடம்பெறும் செந்தில் என்ற பாத்திரம் மனநலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்படுகிறான். மருத்துவரிடம் காட்டி மருந்துகள்வாங்கிவிட்டு காரில் ஊறுமுன் செந்தில் தன் அண்ணன் கைபிடியை உருவிக்கொண்டு ஓடிவிட்டான்.

"ஒருமாதமாய் தேடி அலுத்துப்போன குமரவேல் அவடைய கடைவேலையைக் கவனிக்கப் போய்விட்டார். ஒரு மாதம் கழிந்தும் வரவில்லை என்பதால் துயரின் நோய்க்குறிகள் தீர்ந்து துயரர் நலமடைந்துவிட்டார் எனற முடிவுக்கு வந்த ஹோமியோபதி மருத்துவர் ஞானம் தன்னுடைய கிரீடத்தில் இனனொரு இறகைச் சூடிக்கொண்டார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

விஜயலட்சுமிக்கு செந்திலைப் பற்றி சேதி எதுவும் தெரியாது. அதற்கு முன்பே அவள் மூத்த அண்ணன் வீட்டுக்குப் போய்விட்டாள். அவன் அவளிடம் கடைசியாகக் கொடுத்திருந்த தஸ்தாயேவ்ஸ்கின் 'வெண்ணிற இரவுகள்' புத்தகம் இன்னமும் வாசிக்கப்படாமல் அவளுடைய அலமாரியில் சேலைகளுக்கு மேல் காத்திருந்தது."( து.த.சூ.ரோ.ம. ப. 26) என்ற துண்டிக்கப்பட்ட தலையில் சூடிய ரோஜாமலர் என்னும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'குரல்கள்' சிறுகதையின் இறுதியில் மருத்துவமனையிலிருந்து தப்பிய செந்திலின் நிலை, அவரது குடும்பத்தார் நிலை பற்றிய குறிப்புகளை ஆசிரியர் வழங்கியுள்ளார்.

- கதை நிறைவுற்றபிறகு வாசகர்களுக்கு சில பின்குறிப்பு வழங்கும் தன்மை யினை தனது பல படைப்புகளில் ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். தன்னுடைய படைப்பினை மேலும் சுவாரஸ்யப்படுத்த, வாசகனோடு ஒன்றிப்போக இந்த உத்தியை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார் எனலாம்.

'பின்பும் பெய்தது மழை' எனும் சிறுகதைத்தொகுதியில் இடம்பெறும் 'தழும்பின் கதை' என்ற சிறுகதையின் இடையில் " சரி ,சரி, கதை முடிந்துவிட்டதா ? எங்களுக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன என்று கேட்கும் வாசகர்களுக்கு ஒரு பின்குறிப்பு..... நீட்டி முழக்கி மிகுந்த நம்பிக்கையோடு தழும்பு கேட்ட கேள்வியை கதாசிரியர் சைலண்ட் மோடில் போட்டுவிட்டர். என்ன செய்தாலும் தழும்பு என்ன கேட்டிருக்கும் என்று வாசகர்களுக்குத் தெர்யாதா ?"(பி.பெ.ம.ப. 52) என்று தொடங்கி, தனது குறிப்பினை விரிவாக வழங்கியுள்ளார்.

என்ற சிறுகதைகளில் பின்குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்பு தருதல்**

கதை நிறைவுற்ற பிறகு பின்குறிப்பு கொடுத்தல் எனும் தன்மையை மீறி , வாசகன் படிக்கும் அந்த நிமிடத்திலேயே கதைக்களத்தை, கருவை ஐயமற அறிந்து கொள்ள ஏதுவாக ஆசிரியர் அடிக்குறிப்பு வழங்குதல் என்ற ஒரு குறிப்பினையும் பயன்படுத்தியுள்ளார். கவிஞர்கள் சிலர் வரலாற்றுக்குறிப்புகளை கவிதையில் புகுத்தி எழுதுகின்ற போது , அந்த நிகழ்வு பிற்கால வாசகர்களுக்கு புரிதலில் இடையூறு தரும் தன்மையில் அமையும் என்பதால் அந்த சம்பவம் சார்ந்த குறிப்புகளை அடிக்குறிப்பாக வழங்குதல் என்பதை வழக்கமாகக் கொண்டனர். அதுபோல இங்கே பிறிதொரு மரணம் எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள 'மார்ட்டின் ஹைடேக்கரும் மத்தியானச் சோறும்' என்ற சிறுகதையில் அடிக்குறிப்பு வழங்கும் உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.

"மார்ட்டின் ஹைடேக்கர் ( 1889-1976): இருத்தல் நிலை தத்துவ கர்த்தாக்களில் முக்கியமானவர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த அவருடைய நூற்றாண்டு 19;89. முhனிட நிறைவை அடைவதற்கான வழிகாட்டிகளை வாழ்க்கையிலேயே காணமுடியும் என்று கருதியவர். மனிதவாழ்க்கையை மட்டுமே வாழக்கை என்று கொண்டவர். இருத்தல் என்ற சொல்லை , தன்னைக் கடந்து சென்று


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

கொண்டேயிருக்கும் என்ற பொருளைக் கொண்டதாகும் என்று சொல்பவர்.”( பி.ம.ப. 107) என்று அடிக்குறிப்பினை வழங்கியுள்ளார்.

இக்கதையின் முடிவில் , பரந்தாமனுக்கு அவனது தாய் அறிவுரை கூறினாள் அவன் நண்பனும் அறிவுரை கூறினான் தன் நிலை உணராதவர்களிடம் நின்று பேசுவது உசிதமல்ல என்று எண்ணியவன் கிளம்பிவிட்டான். நண்பனும் அவன் பின்னால் கிளம்பிவந்தான். ‘சென்னை வந்த பிறகு தான் அவன் மார்ட்டின் ஹைடேக்கரையும் தெரிந்து கொண்டிருந்தான்.’ என்று எழுதியிருக்கிறார் ஆசிரியர். இருத்தல் என்ற கொள்கையை விளக்க நினைத்த ஆசிரியர் அக்கொள்கையைக் கூறியவன் பெயரை மட்டும் பதிவுசெய்துவிட்டார். அதனால் அதை விளக்குவதற்காக வாசகன் மார்ட்டின் ஹைடேக்கர் கூறிய கொள்கையினை அறிந்து கொள்ள ஏதுவாக அடிக்குறிப்பு வழங்கியுள்ளார்.

**பக்கத்தலைப்பிடும் முறை**:

சிறுகதையின் இலக்கணப்படி என்று கூற முடியாவிட்டாலும் கதையின் நிகழ்வுகளை வாசிக்கும் வாசகனுக்கு தெள ;ளத்தெளிவான முறையில் எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணமே பக்கத் தலைப்பிட்டு விளக்குதல் என்பதை தனது கதைகளில் உத்தியாக கையாளும்படிச் செய்துள்ளது எனலாம்.

‘துண்டிக்கப்பட்ட தலையில் சூடிய ரோஜாமலர்’ எனும் சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள ‘குரல்கள்’ சிறுகதையில்; பக்கத்தலைப்பிடும் புதிய முறையினை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

இக்கதையில் செந்திலின் கதை - தற்சமயம் - பின்கதை என்ற உட்தலைப்புகளைப் பயன்படுத்தியுள்ளார்.

**தொகுப்புரை:**

- பக்கத்தலைப்பிடும் முறை எனும் புதிய உத்திமுறையினை ஆசிரியர் தனது சிறுகதைத் தொகுதியில் பயன்படுத்தியுள்ளார்
- பின்குறிப்பு கூறுதல் எனும் உத்தியினைப் பயன்படுத்தி தேவையான இடங்களில் கதைகளின் விளக்கத்தினைத் தனது வாசகருக்கு வழங்கியுள்ளார்.
- கதையோட்டத்திலே முன் நிகழ்ந்த நிகழ்வுகளை பாத்திரங்கள் நினைத்துப் பார்க்கும் வகையில் அமைக்கும் பின்னோக்கு உத்தியினை ஆசிரியர் தனது படைப்பில் திறம்படக் கையாணடுள்ளார்.
- முன் நிகழ்ந்த சம்பவங்களை மிகவும் விளக்கமாக எடுத்து விளக்கும் சம்பவ விளக்க உத்தியினை அழகாகப் பயன்படுத்தியுள்ளார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

துணைமை நூல் :

1. உதயசங்கர்(ஆசிரியர்), துண்டிக்கப்பட்ட தலையில் சூடிய ரோஜாமலர், 7, இளங்கோ சாலை தேனாம்பேட்டை சென்னை - 600018
2. உதயசங்கர்(ஆசிரியர்), 'மீனாளின் நீலநிறப்பூ, 7, இளங்கோ சாலை தேனாம்பேட்டை சென்னை - 600018


http://Creativecommons.org//license/by/4.0/.

http://Creativecommons.org//license/by/4.0/.